புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# இனக்குழுவியல் நோக்கில் வேள்பாரி நாவல்

**ஆய்வாளர்**

**பொன்.கனகா,**

பதிவு எண்: *21212014022010,*
*முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம்,*

*(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக அங்கீகாரம் பெற்றது)*

*ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி- 628002.*

**நெறியாளர்**

**முனைவர்.ர.செல்வலதா,**

*நெறியாளர் & உதவிப் பேராசிரியர்,*

*தமிழ்த்துறை & தமிழாய்வு மையம்,*

*ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி,*

*தூத்துக்குடி- 628 002.*

**ஆய்வுச் சுருக்கம்:**

*பண்டைய இலக்கியங்கள் யாவும் செய்யுள் வடிவில் அமைந்திருந்தன. மேலை நாட்டாரின் வருகைக்குப்பின், குறிப்பாக பதினெட்டாம் நூற்றாண்டுக்குப் பின் தமிழ் இலக்கியங்களில் மரபு வழியாக இருந்த யாப்பு முறைகள் மாற்றம் பெற்றுச் சிறுகதை, புதினம், நாடகம், புதுக்கவிதை போன்ற நவீன இலக்கிய நடைத் தோற்றம் பெற்றன. வீரயுக நாயகன் வேள்பாரி, சாகித்ய அகாடெமி விருது பெற்ற எழுத்தாளர் சு.வெங்கடேசனால் எழுதப்பட்ட நாவல். இது கடையேழு வள்ளல்களுள் ஒருவரான பாரியையும், வேளிர் குலத்தையும் மையமாக வைத்து எழுதப்பட்ட நவீன இலக்கியம். இந்நாவல் வழி, பாரியின் குலமான வேளிர் இனம் மற்றும் சங்க காலத்தில் வாழ்ந்த பல்வேறு இனக்குழுக்கள் பற்றிய செய்திகளை ஆராய்ந்து அறிய முடிகிறது.*

**முன்னுரை:**

*மக்களினத்தை அறிந்து கொள்ள முக்கிய ஆவணமாக அமைவன இலக்கியங்கள் எனலாம். தொடக்கக் காலத்தில் எழுந்த புதினங்கள் மேல்தட்டு மக்களை மையப்படுத்தி எழுதப்பட்டன. அதன் தொடர்ச்சியாக இடைக்காலம் முதல் இன்றுவரை எழுதப்படும் புதினங்கள் குறிப்பிட்ட வட்டார மக்களின் வாழ்வியல் அல்லது பல்வேறுபட்ட இனத்தைச் சார்ந்த மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு படைக்கப்பட்டு வருகின்றன. அவை படிக்கும் வாசகனின் மனதை ஈர்ப்பதுடன் பல்வேறுபட்ட சமூகத்தின் வரலாற்றையும், பழக்க வழக்கங்களையும், கலாச்சாரத்தையும் அறிய வழிவகை செய்கிறது. அந்த வகையில், பல்வகை இனக்குழு மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்ற வேள்பாரி நாவலை, இனக்குழுவியல் நோக்கில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.*

**ஆய்வு அணுகுமுறை:**

*இனக்குழுவியல்/ இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப்பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகின்றது. இவ்வாய்வில் வேள்பாரி நாவல் வெளிப்படுத்தக்கூடிய, சங்க காலத்தில் வாழ்ந்த இனக்குழுக்கள் குறித்த செய்திகள் ஆராயப்படுவதால் "இனவரைவியல் அணுகுமுறை" கையாளப்பட்டுள்ளது. நாவலில் காணப்படும் பல்வகை இனக்குழுக்கள் பற்றிய கூறுகளை வகைப்படுத்தி, தரவுகளின் அடிப்படையில் தொகுத்தும் பகுத்தும் ஆய்வு மேற்கொள்ளப்படுவதால், பகுப்பாய்வு அணுகுமுறை, விளக்கமுறை அணுகுமுறை, வரலாற்று அணுகுமுறை ஆகிய அணுகுமுறைகளும் கையாளப்பட்டுள்ளன.*

**இனக்குழுவியல்:**

*உலகில் எண்ணிலடங்கா வகையில் பரவி வாழும் சமுதாய மக்களின் பண்பாட்டைக் காலப் பரிமாணங்களுடன் ஆராயும் மானிடவியல் பிரிவே பண்பாட்டு மனிடவியலாகும். இதன் தலையாய பிரிவுகள் இனக்குழுவியல் மற்றும் இனக்குழு ஒப்பாய்வியல் ஆகும். "இனக்குழுவியல்" என்னும் பொருளுடைய "ethnography" என்னும் ஆங்கிலச்சொல்லில் இருந்து பெறப்பட்டது. "ethnos" என்பதற்கு இனம், குழு, மக்கள் என்று பொருள்படும். "graphein" என்பதற்கு எழுதுவது என்று பொருள்படும்.*

**இனக்குழு வரலாறு***:*

*ஆதிகாலத்தில் மனிதன் இனக்குழுக்களாக காட்டில் வாழ்ந்து வந்தான். வேட்டையாடி உணவு உண்டவன் அடுத்தகட்டமாக கால்நடைகளை வளர்க்கத் தொடங்கினான், விளைவித்து உண்ணத் தொடங்கினான். கால்நடைகளே பெருஞ்செல்வமாகக் கருதப்பட்டன. எனவே, அவற்றை அதிகப்படுத்தவே அனைத்து குழுக்களும் ஆசைப்பட்டன. இரவோடு இரவாக அடுத்த இனக்குழுவின் கால்நடைகள் களவாடப்பட்டன. களவு கொடுத்தவர்கள் ஆயுதங்களோடு சென்று போரிட்டு மீட்டு வந்தனர். அடுத்தகட்டமாக, நல்ல விளைநிலங்களைக்*

கைப்பற்ற இனக்குழுக்கள் மோதிக்கொண்டன. கால்நடைகளை பறிக்கும்போது மோதலாக இருந்த செயல், அடுத்து போர்களாகப் பரிணமித்தது. இந்த போர்களில் வென்றவர்கள் தாங்கள் இனிக் குழுத்தலைவர்கள் அல்ல. வேந்தர்கள் என்று அறிவித்தனர். வேந்தர்கள் என்றால் சேர, சோழ, பாண்டிய மூவேந்தர் மட்டுமே, மற்ற அனைவரும் குறுநில மன்னர்கள் என்று அறிவித்தனர். இவர்களது தலைமையேற்காத இருபதுக்கும் மேற்பட்ட குலத்தலைவர்கள் இனக்குழுக்களாக மலையும் காடும் சார்ந்த நிலப்பகுதியில் வாழ்ந்தனர்.

**வேளிர் குலம்:**

வேந்தர்களின் தலைமையேற்காது, இனக்குழுக்களாக மேற்குத் தொடர்ச்சி மலையில் வாழ்ந்த பதினாறு(16) இனக்குழுக்களுக்குத் தலைமையாக வேளிர்குலம் விளங்கியது என்றும், வேளிர் குலத்தின் நாற்பத்திரண்டாவது (42) குலத்தலைவன் கடையேழு வள்ளல்களுள் ஒருவரான பாரி என்றும் நாவல் எடுத்துரைக்கின்றது.

"சங்ககால தமிழகத்தில் கொடை, வீரம், சிறப்பு, காதல் என்று அனைத்திலும் சிறந்து விளங்கிய மூவேந்தர்களை விட ஒரு காலக்கட்டத்தில் வேளிர் குடிகளை சேர்ந்த ஏழு (7) வள்ளல்கள் சிறந்து விளங்கினார்கள்!!"[1] என்று தமிழேழு வள்ளல்கள் நூல் குறிப்பிடுகின்றது.

வேளிர்குலத்தின் குலச்சின்னமாக பனைமரம் & பனம்பூ இருந்துள்ளது. **"அதனிடம் ஒப்படைத்துவிட்டுப் போனால், எந்த ஆபத்தும் வராது. அதனால்தான், பனை அடிவாரத்தில் உங்களை உட்கார வைத்தேன்"** என்ற வரிகளின் மூலம், ஆபத்துக்களிலிருந்து குலச்சின்னம் தங்களைக் காக்கும் என்று வேளிர்கள் கொண்டிருந்த நம்பிக்கை புலப்படுகிறது.

**அகுதை இனம்:**

வைகைக்கரை கூடல் நகரை ஆட்சி செய்தவர்கள், அகுதை குலத்தவர்கள். வைகைக் கரையில் செழித்து வளர்ந்த வேளாண்மை, அழகிய நாகரிகத்துக்கு அடித்தளம் அமைத்தது. ஆற்றங்கரையின் நிலவளத்தைப் பயன்படுத்தி, பயிர் வளர்க்கவும், விளைய வைக்கவும், அறுவடை விளைச்சலைக் குவிக்கவுமாக, வேளாண்மையின் ஆதி நுட்பங்களைக் கண்டறிந்தவர்களாக கூடல் மக்கள் விளங்கியுள்ளனர். இதனை, **"வேளாண் அறிவின் நுணுக்கத்தை இந்த உலகுக்கு கண்டறிந்து சொன்னது அகுதையின் குலமல்லவா!"** என்ற நாவல் வரிகள் உணர்த்துகின்றன. **"அந்தக் கூடல்நகரை உருவாக்கிய குலத்தின் தலைவன் அகுதை"** என்று நாவல் வரி குறிப்பிடுவதினால்,. கூடல் நகரவாழ் மக்கள், அதனால்தான் அகுதை குலம் என அழைக்கப்பட்டிருப்பர் என்பதை அறிய முடிகிறது.

"பாவடி யானை பரிசிலர்க்கு அருகாச்
சீர்கெழு நோன்றான் அகுதைக்கண் தோன்றிய
பொன்புனை திகிரியின் பொய்யா கியரோ!"[2] (புற.254)

என்றும்,

*“மணம் நாறு மார்பின், மறப்போர் அகுதை*
*குண்டுநீர் வரைப்பின், கூடல் அன்ன”[3] (புற.347)*

*என்றும் புறநானூற்றுப் பாடல் வரிகள், அகுதை மற்றும் அவனது கூடல் நகரம் குறித்துக் குறிப்பிடுகின்றன . பறவைகள் துணைகொண்டு வேளாண்மை மேற்கொண்டனர். முதல் விதை நடும்போது, அதற்கு வழிகாட்டியாக அமைந்த பறவையின் சிறகை, அப்பயிரின் அருகில் நட்டு அதற்கு நன்றோ சொல்லும் மரபு உடையவர்களாக அகுதை இனத்தவர் திகழ்ந்துள்ளனர் என்றும், அகுதை இனத்தின் குலப்பறவை அசுணமா என்றும் நாவல் குறிப்பிடுகின்றது. பறவைகள் தங்களின் வேளாண்மைக்கு உதவும் ஆசான்கள் என நம்பினர். **“பயிரைத் தின்னவரும் விலங்குகளை வேல்கொண்டு விரட்டுவர். ஆனால், பறவைகளை வேண்டிக்கொள்ள மட்டுமே செய்வர்”** என்ற நாவல் வரிகளிலிருந்து பறவைகள் அகுதை இனத்தில் பெற்றிருந்த முக்கியத்துவத்தை அறிய முடிகிறது.*

*“கடாம் இருஞ்சிறைத் தொழுதி ஆர்ப்ப யாழ்செத்து*
*இருங்கல் விடரளை அசுணம் ஓர்க்கும்”,[4] (அகம்.88)*

*என்ற அகநானூற்றுப் பாடல் வரிகள், அசுணமா யாழிசை போல இனிமையாக ஒலிக்கக் கூடியது என்று குறிப்பிடுகிறது.*

***“வைகையின் புனலாட்டு விழா, கூடல் வாசிகள் முழுவதும் நீராடி மகிழ்ந்திருக்கும் நன்னாள்.”** அன்றைய நாளில், பொருநை ஆற்றின் முகத்துவாரத்தில் இருந்த கொற்கைபாண்டியன், வைகையில் புனலாட இறங்கிய அகுதை மற்றும் அவனது குலமக்களை, வைகை நதியிலேயே கொன்று அழித்துவிட்டதாக நாவல் குறிப்பிடுகின்றது.*

***திரையர் குலம்:***

*மேற்குமலையின் ஆதிப்பழங்கூட்டம் திரையர் கூட்டம். திரையர்கள் மிகுந்த பலம் பெற்று விளங்கியுள்ளனர். காட்டெருமையையே அடக்கும் அளவிற்கு வலிமை வாய்ந்த தோள்களைப் பெற்றவர்கள். அவர்களின் வலிமைக்கு, ஈடு இணை கொண்ட குலம் வேறில்லை என்பதனை, **“திரையர்போல் திடம்கொண்ட ஒரு குலம் இந்த மண்ணில் வேறேது”** என்ற நாவல் வரிகள் வழி உணரமுடிகின்றது.*

*காட்டெருமையின் ஓட்டத்தைவிட, திரையர்கள் வேகமாக ஓடும் திறம் பெற்றிருந்ததாக நாவல் கூறுகிறது. **“அவர்கள் காலடி ஒரு சுளகு போல் விரிந்து இருந்தது”** என்ற வரி மூலம், திரையர்கள் பெற்றிருந்த இந்த உடலமைப்புதான் அவர்களின் வேகமான ஓட்டதிற்குக் காரணமாக இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.*

*வெற்றிலையை முதன்முதலாகக் கண்டறிந்த பெருமைக்குரியவர்கள், “திரையர்கள்”. இதனை, **“வெற்றிலையைக் கண்டறிந்த மாவீரர்களான திரையர்களின் கதை”** என்னும் வரிகள் உணர்த்துகின்றன. திரையர் கூட்டம் மணம்முடிப்பதற்கு **“காட்டெருமையை அடக்கியவன், மாலைக்குள் மந்தையில் வெற்றி இலையை வைத்து மணமுடிக்க வேண்டும்”** என்ற பழக்கத்தைப்*

*பின்பற்றியதாக நாவல் குறிப்பிடுகின்றது. இதன்மூலம் வெற்றிலை, அவர்கள் வாழ்வில் பெற்றிருந்த முக்கியத்துவத்தை அறிய முடிகிறது. இந்த மரபின் எச்சமாய், இன்று வரை தமிழ்ச்சமூகத்தில் மணம்முடிக்கும்போது வெற்றிலை மாற்றும் சடங்கு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.*

*"அம்மன் திரையலோ தடைக்கா யீத்த"[5], (சிலப்-16,55)*

*என்று சிலப்பதிகாரமும்,*

*"பாசிலைத் திரையலும் பளிதமும் படைத்து"[6] (மணி-28, 243)*

*என்று மணிமேகலையும், வெற்றிலையைத் "திரையல்" என்று குறிப்பிட்டிருப்பதை அறியமுடிகிறது.*

***மதங்கர் இனம்:***

*வேட்டைச்சமூகப் பின்புலத்தில் இருந்து பாணர்களாக மாறியவர்கள் சித்தாற்றின் வடபுலத்தைச் சேர்ந்த பாணர் கூட்டம். அவர்கள் யாழ் தெய்வமான மதங்கனையும், மதங்கியையும் வணங்குபவர்கள். இக்குழுத் தலைவன் "மதங்கன்" என்றும், தலைவி "மதங்கி" என்றும் அழைக்கப்பட்டதாக நாவல் குறிப்பிடுகின்றது.*

*யாழுக்கான நரம்பினை தாங்கள் வேட்டையாடிய விலங்கிலிருந்தே எடுத்துக்கட்டுவதும், அதன் தோலினைக் கொண்டு பறை செய்வதும் மதங்கர் வழக்கமாக இருந்துள்ளது. இக்குழுவினரின் அடையாளம் தடாரி.* ***"தங்களின் முன்னோர்கள் வேட்டையாடிய யானையின் காலடியின் அளவுகொண்டே தடாரியை வடிவமைப்பார்"*** *என்ற நாவல் வரிகள் வழி, மதங்கர் இன தடாரி வடிவமைப்பு முறையை அறியமுடிகிறது. தடாரியை கூத்து நடக்கும் இடத்தில் மட்டுமே கீழே இறக்கவேண்டும். பயணத்தின் போது அவற்றைக் கீழே இறக்கி மண்ணில் வைக்கக் கூடாது என்ற மரபு மதங்கரினத்திடம் இருந்துள்ளது. இதனை,* ***"தடாரி மண்ணைத் தொட்டால், அங்கு கூத்து நிகழ்த்திவிட்டுத்தான் அவற்றைத் தூக்க வேண்டும்"*** *என்ற நாவல் வரிகள் உணர்த்துகின்றன.*

*"பாணர்களில் ஆடவர்களை சென்னியர், வயிரியர், செயிரியர், மதங்கர், இன்னிசைகாரர், பாணரென்ப"[7] (வாழ்வியற் களஞ்சியம்,தொகுதி.12) என்றும் "மாதாங்கி என்னும் இசைத் தெய்வத்திற்குத் தம் கலைத்திறத்தால் வழிபாடாற்றிய ஆண் கலைஞர் மதங்கர், பெண் கலைஞர் மதங்கி"[8] (வாழ்வியற் களஞ்சியம்,தொகுதி.12) என்று அழைக்கப்பட்டதாகவும் வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடு கிறது.*

***பாணர் குலம்:***

*சங்ககாலத்தில் பாட்டு பாடும் குலத்தினர், பாணர்கள் என்று அழைக்கப்பட்டனர்.* ***"பாணர்கள் பாடல் பாடுபவர்கள், இசைஞர்கள், கலைஞர்கள்"*** *என்ற நாவல் வரிகள் பாணர் குல செயற்பாடுகளை விளக்குகின்றன. ஐவகை நிலத்தில் அமைந்த அனைத்து நாடுகளுக்குள்ளும்*

ஊடுருவி, அலைந்து திரிந்தவர்களாக பாணர் கூட்டத்தினர் இருந்தனர். அவர்கள் யாழெடுத்து மீட்டி,பீறிடும் குரலில் பாடியபோதுதான், போர்க்களத்தில் மரணத்தைத் தழுவியவர்கள் வரலாற்றில் உயிர்கொண்டு உலவினர். **“குலத்தலைவர்களும் சிற்றரசர்களும் பாணர் சமூகத்தை அரவணைத்து அள்ளித் தந்தனர்”** என்ற வரிகள் அக்காலச் சமுதாயத்தில் பாணர்கள் பெற்றிருந்த செல்வாக்கை எடுத்துரைக்கின்றன.

*“ஐதுஅமை பாணி வணர்கோட்டுச் சீறியாழ்க்*
*கைவார் நரம்பின் பாணர்க்கு ஓங்கிய,*
*நிரம்பா இயவின் கரம்பைச் சீறூர்;”[9] (புற.3o2)*

என்று புறநானூற்றுப் பாடல் நரம்புகளை மீட்டி இசைஎழுப்பும் பாணர்களுக்கு, குறுகிய வழிகளுடைய சாகுபடி நிலங்கள் நிறைந்த சிற்றூர்கள் வழங்கப்பட்டதாக குறிப்பிடுகின்றது.

**கிணையர் குலம்:**

சங்க காலத்தில் பாண் சமூகம் என்பதற்குள் பல்வேறு இனக்குழுக்கள் இருந்தன. அவர்கள் இசைக்கருவியாலும், பாடும் பன்முறையாலும், உத்தி முறையாலும், இன்னும் பிறவகை வினை நுட்பங்களாலும் பாண் குடியினர் பல்வேறு சமூகத்தினராகக் காணப்பட்டனர். கிணைப்பறையை இசைப்பவர்கள் கிணையர்கள் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் கிணையர்,கிணைவன், கியநிமகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். இதனை, **“கிணைகொண்டு பாடும் கிணையர் கூட்டந்தான்..”** என்ற நாவல் வரிகள் உறுதிப்படுத்துகின்றன.

*“கணையர், கிணையர், கை புனை கவணர்,*
*விளியர், புறக்குடி ஆர்க்கும் நாட!”[10] (நற்.1o8)*

என்ற நற்றிணைப் பாடல், கிணையர் பற்றிய செய்தியைக் கூறுகிறது.

**முடிவுரை:**

வேள்பாரி நாவல் குறிப்பிடுகின்ற, மேற்குத் தொடர்ச்சி மலையில் வாழ்ந்த இனக்குழுக்களுக்குத் தலைமையான வேளிர் குலம், கூடல் நகரத்தினை ஆண்டு வாழ்ந்த அகுதை இனம், மேற்கு மலையில் வாழ்ந்த வலிமை வாய்ந்த ஆதிப்பழங்கூட்டமான திரையர் குலம், வேட்டைச் சமூகத்தின் பின்புலத்தில் இருந்து பாணர்களாக மாறிய மதங்கர் இனம், பாடல் பாடும் கலைஞர்களாகத் திகழ்ந்த பாணர் குலம், கிணைப் பறையை இசைக்கின்றவர்களான கிணையர் குலம் முதலான இனக்குழுக்கள் பற்றிய தரவுகள் இவ்வாய்வின் முடிவுகளாக அமைகின்றன.

**மேற்கோள்கள்**:

1. தமிழேழு வள்ளல்கள் காலமும் வரலாறும், சேரன் செங்குட்டுவன், முதற்பதிப்பு 2o22, பர்ப்பிள் புக் ஹவுஸ் பதிப்பகம், டவுண் ஹால், கோயம்புத்தூர் – 641 001.

2. புறநானூறு மூலமும் உரையும், புலியூர்கேசிகன் (உ.ஆ), முதற்பதிப்பு 2010, சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை-14.

3. அகநானூறு மூலமும் உரையும், ந.மு.வேங்கசாமி நாட்டார் (தொ.ஆ), சாரதா பதிப்பகம், மூன்றாம் பதிப்பு -2o19, ராயபேட்டை, சென்னை-14.

4. நற்றிணை மூலமும் உரையும், வித்துவான் எச்.வேங்கடராமன் (ப.ஆ), டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசன்ட் நகர், சென்னை -9o.

5. சிலப்பதிகாரம் - மூலமும் திறனாய்வும், ரா.சீனிவாசன்;(உ.ஆ), இரண்டாம் பதிப்பு 1998, அணியகம், 5,செல்லம்மாள் தெரு, செனாய் நகர், சென்னை-600 030.

6. மணிமேகலை, உ.வே.சாமிநாதையர் (தொ.ஆ), ஒன்பதாம் பதிப்பு (1989), உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசன்ட் நகர், சென்னை -9o.

7. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி பன்னிரெண்டு, முனைவர். அ.மா.பரிமணம், மறுபதிப்பு (1992), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.